JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/ 50 /2021 |
| | : | Prosecution P.W –5 |
| NAME | : | ரவி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday 12.01.2026

முதல் விசாரணை

நான் தற்போது சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மாசான முத்து மற்றும் புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் உத்திரகுமார் ஆகியோர்களின் கையெழுத்தும் கையொப்பமும் நன்றாக தெரியும் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 06.06.2019 ம் தேதி 15.00 மணிக்கு மேற்படி தலைமை காவலர் நிலைய பொறுப்பில் இருந்த போது வீரசெல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 194/2019 இந்திய தண்டனை சட்டம் இதசபிரிவுகள் 294(b), 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் மனுவின் அசலையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை

விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்துள்ளார். **புகார் மனு அசாஆ 2 ஆகவும் மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 06.06.2019 ம் தேதி 16.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ஆதிஸ்வரன் மற்றும் திருமலைமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் வீரசெல்வி, முருகலெட்சுமி, பெரியசாமி, சிவசங்கரபாண்டியன், பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மாசானமுத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை 06.06.2019 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையானதால் இதச பிரிவுகள் 294(b), 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் இறுதி அறிக்கை 07.06.2019 ல் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று சொன்னாலும், நான் சொன்னபடி சொன்னதுபோல் எதிரிகள் கைதுசெய்யபடவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஒரு தலைப்பட்சமாக விசாரித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi